# தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

### இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
### இரண்டாம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**

**C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழர்கள் வீட்டுத் திண்ணைகளை அமைந்திருப்பது எதன் அடையாளமாகத் திகழ்கிறது?
2. மொழிக்குப் பாவாணர் கூறும் விளக்கம் யாது?
3. பழந்தமிழ் நாட்டில் ஆடவர் காளையை எதன் பொருட்டு அடக்கினர்?
4. பாண்டிய நாட்டின் இரு துறைமுக நகரங்களின் பெயர்கள் யாவை?
5. மருந்து நூல்கள் எனப்படுபவை யாவை?
6. சமணர் செய்த தானங்களைக் குறப்பிடுக.
7. இசுலாம் என்பதன் பொருள் யாது?
8. குடத்தில் கொண்டு வரப்பட்ட வணிகப் பொருள்கள் எவை?
9. வலங்கை, இடங்கைப் பிரிவுகளில் இடம் பெற்ற சாதிகள் எத்தனை?
10. போப்பையரைக் கவர்ந்த நெறிகள் யாவை?
11. பண்பாட்டில் ஏற்பட்ட மாபெரும் இழப்பு எது?
12. கதர் என்பது யாது?
13. திரைப்படத்தைக் குறித்துப் பாமரன் என்ன கருதுகிறான்?
14. நாயக்கர் காலத்தில் நாடாண்ட அரசிரியர் இருவரைக் குறிப்பிடுக.
15. மெய்க்கீர்த்தி என்றால் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** (5x3=15)

1. இடக்கரடக்கல் என்றால் என்ன? அது எவ்வாறு பண்பாட்டு கூறாகக் கருதப்பெறுகிறது?
2. தமிழர் பண்பாட்டில் 'மானம்' பற்றிய சிந்தனையை எழுதுக.
3. மாமல்லபுரத்தில் காணப்படும் சிற்பம் குறித்து ஐந்து வரிகள் எழுதுக.
4. தமிழகத்தின் பழமையான ஓவியங்கள் எவை?
5. திருமலை நாயக்கர் மகால்–குறிப்பு வரைக.
6. பெரியாழ்வார் கனவில் திருமால் என்ன கூறினார்?
7. தமிழர் குடியேறிய நாடுகள் சிலவற்றைக் கூறுக?
8. ஹரப்பா நாகரிகம் பற்றி எழுதுக?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** (3x15=45)

1. (அ) தமிழில் உள்ள பழமொழிகளும் விடுகதைகளும் தமிழ்ப்பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன என்பதைச் சான்று கூறி விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகள் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளமையைச் சுவை மிக்க நிகழ்ச்சிகளால் விளக்குக.

2. (அ) விடுதலை இயக்கம் வளர்ந்த தமிழர் பண்பாட்டைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சமய நல்லிணக்கத்தைக் கிறித்தவர்களும் இசுலாமியரும் வளர்த்த நெறியைப் புலப்படுத்துக

3. (அ) கல்வெட்டும் காசும் அக்கால அரசர்களில் ஆட்சி முறையை எடுத்துரைக்கும் பாங்கை விவரிக்க

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் பண்டைக்காலத் தொட்டுப் பலரது படையெடுப்புக்களாலும் ஆட்சி மாற்றத்தினாலும் பண்பாட்டு மாற்றங்கள் சிதைந்துள்ள தன்மையை ஆராய்க.

❋ ❋ ❋